இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 26 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – ஆவணி 20 – வெள்ளிக்கிழமை 05 செப்டம்பர் 2025 – சென்னை 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 26 : Thiruvalluvar Year - 2056 - Aavani 20 - Friday 05 September 2025 - Chennai 16 Pages ₹ 5.00





முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் 3.9.2025 அன்று TN RISING ஐரோப்பிய பயணத்தின் இரண்டாம் கட்டத்தில், இங்கிலாந்து நாட்டின், இலண்டன் நகரில் உள்ள வெளியுறவு, காமன்வெல்த் மற்றும் மேம்பாட்டு அலுவலகத்தில், இங்கிலாந்து அமைச்சர், நாடாளுமன்ற துணை செயலாளர் (இந்தோ–பசிபிக்) கேத்தரின் வெஸ்ட் அவர்களை சந்தித்து, பல்வேறு துறைகளில் தமிழ்நாடு – இங்கிலாந்து ஒத்துழைப்புக்கான வாய்ப்புகள் குறித்து விவாதித்தார். இச்சந்திப்பின்போது, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, முதலமைச்சரின் முதன்மைச் செயலாளர் டாக்டர் பு. உமாநாத், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை செயலாளர் வி. அருண் ராய், தமிழ்நாடு தொழில் வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமை செயல் அலுவலர் மருத்துவர் தாரேஸ் அகமது, மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் TN RISING ஐரோப்பிய பயணத்தின் இரண்டாம் கட்டத்தில் 3.9.2025 அன்று இங்கிலாந்து நாட்டின், இலண்டன் நகரில், ரோல்ஸ் ராய்ஸ் நிறுவனத்தின் தலைமைப் பரிமாற்ற அலுவலர் நிக்கலோ கிராடி ஸ்மித் அவர்களை சந்தித்து, தமிழ்நாட்டில் அந்நிறுவனத்தின் விரிவாக்கப் பணிகள் குறித்து ஆலோசனை மேற்கொண்டார்.

# உலகப் புகழ்மிக்க ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகத்தில் - சுயமரியாதையைக் காத்த தந்தை பெரியார் திருவுருவப் படத்தை திறந்து வைப்பதில் பெருமைப்படுகிறேன்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் பெருமிதம்!

**லண்டன், செப். 5 -**

**உலகப் புகழ்மிக்க லண்டன் பல்கலைக்கழகத்தில், சுயமரியாதைத் தலைவர், தன்மானத் தலைவர் தந்தை பெரியார் அவர்களின் திருவுருவப் படத்தை திறந்து வைப்பதில் பெருமைப்படுகிறேன். பூரிப்படைகிறேன் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.**

இது தொடர்பாக இங்கிலாந்து நாட்டின் ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தில் பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார் அவர்களின் திருவுருவப் பட திறப்பு விழா குறித்து இலண்டனிலிருந்து தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள வீடியோ சமூக வலைதளப் பதிவு வருமாறு:-



**தமிழர்களுக்கு என்னுடைய அன்பான வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.**


**இன்று வியாழக்கிழமை (4.9.2025) மாலை நடைபெறும் நிகழ்ச்சியில் உலகப் புகழ்மிக்க ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தில் நம்முடைய சுயமரியாதை தலைவர், தன்மானத் தலைவர் தந்தை பெரியார் அவர்களுடைய திருவுருவப் படத்தை திறந்து வைக்க இருக்கிறேன் என்ற செய்தி உங்களுக்கு எல்லாம் தெரிந்திருக்கும். அதை திறந்து வைத்து, பேசுவதை எண்ணி பெருமைப்படுகிறேன், பூரிப்படைகிறேன்.**

**ஏனென்றால் அவர் தமிழர் தலைவர் மட்டுமல்ல, தமிழ்நாட்டு தலைவர் மட்டுமல்ல, உலகெங்கும் உள்ள தன்மானத்தை காத்த தலைவராக, சுயமரியாதையை காத்த தலைவராக விளங்கி கொண்டு இருக்கக்கூடியவர்.**

**அவருடைய திருவுருவப் படத்தை திறந்து வைத்து பேச இருக்கிறேன் என்பதை உங்களுக்கெல்லாம் நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.

**(ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தில் நடைபெறும் பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார் அவர்களின் திருவுருவப் பட திறப்பு விழாவில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உரை இன்று (5.9.2025) இந்திய நேரப்படி காலை 7.30 மணியளவில் ஒளிபரப்பப்படும்).**



---

## உயர்கல்வியில் நாட்டிலேயே

# முதன்மை மாநிலம் தமிழ்நாடு என்பது மீண்டும் நிரூபணம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து!

***சென்னை, செப். 5 -***

***உயர்கல்வியில் நாட்டிலேயே முதன்மை மாநிலம் தமிழ்நாடு என்பது மீண்டும் ஒரு முறை நிரூபணமாகியது என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.***

*NIRF என்ற தேசிய நிறுவன தரவரிசை கட்டமைப்பு சார்பில், ஒன்றிய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான், இந்திய அளவில் சிறந்து விளங்கும் உயர்கல்வி நிறுவனங்களின் தரவரிசைப் பட்டியலை வெளியிட்டார். அதன்படி, சிறந்த கல்வி நிறுவனங்களுக்கான உயர்கல்வி தரவரிசைப் பட்டியலில் சென்னை ஐ.ஐ.டி. தொடர்ந்து 7வது ஆண்டாக முதலிடம் பிடித்துள்ளது.*

*சிறந்த மாநில பல்கலைக்கழகங்களுக்கான தரவரிசைப் பட்டியலில் அண்ணா பல்கலைக்கழகம் 2வது இடத்தில் உள்ளது.*

*சிறந்த பல்கலைக்கழகங்களுக்கான தரவரிசைப் பட்டியலில் கோவை அமிர்தா பல்கலைக்கழகம் 8வது இடத்தையும், சிறந்த மருத்துவக் கல்லூரி தரவரிசை பட்டியலில் வேலூர் கிறிஸ்தவ மருத்துவக் கல்லூரி 3வது இடத்தையும் பிடித்துள்ளது. சிறந்த கல்லூரிகளுக்கான தரவரிசைப் பட்டியலில் கோவை PSGR கிருஷ்ணம்மாள் மகளிர் கல்லூரி 9வது இடத்தையும், கோவை PSG கலை மற்றும் அறிவியல் கல்லூரி 10வது இடத்தையும் பிடித்துள்ளது.*

*இதற்கான போட்டியில் இந்தியா முழுவதிலும் இருந்து 8 ஆயிரத்து 686 கல்வி நிறுவனங்கள் இடம்பெற்றன. இதில் அதிகபட்சமாக தென்னிந்திய பகுதி களில் இருந்து மட்டும் 3 ஆயிரத்து 344 கல்வி நிறுவனங்கள் பங்கேற்றிருந்தது.*

*கல்வி நிறுவனங்களின் கற்றல், கற்பித்தல், ஆராய்ச்சி மற்றும் தொழில் முறை பயிற்சி, பட்டப் படிப்பு முடிவு, தொடர்பு மற்றும் உள்ளடக்கம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு பல்கலைக்கழகம், கல்லூரி, ஆராய்ச்சி, என்ஜினீயரிங், மேலாண்மை, துணை மருத்துவம், மருத்துவம், பல் மருத்துவம், சட்டம், கட்டிடம் மற்றும் திட்டமிடல், வேளாண்மை மற்றும் அது சார்ந்த படிப்புகள், புதுமையான கண்டு பிடிப்புகள், ஒட்டுமொத்த பட்டியல் ஆகிய பிரிவுகளில் சிறந்த கல்வி நிறுவனங் களுக்கு புள்ளிகள் வழங்கப்பட்டு, அதில் சிறந்த இடத்தை பிடிக்கும் நிறுவனங்களின் பெயரை இந்த தரவரிசை பட்டியலில் இடம்பெற செய்து வெளியிடுகிறது என்பது குறிப்பிடத்தக்கது.*

*2025ஆம் ஆண்டிற்கான NIRF தரவரிசைப் பட்டியல் உயர்கல்வியில் நாட்டிலேயே முதன்மை மாநிலம் தமிழ்நாடு என்று மீண்டுமொரு முறை நிரூபணம் ஆகியுள்ளது குறித்து முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:-*

***NIRF தரவரிசைப் பட்டியல் 2025: உயர்கல்வி சிறந்த தமிழ்நாடு என மீண்டுமொரு முறை நிரூபணமானது!***

***இந்தியாவின் தலைசிறந்த 100 உயர்கல்வி நிறுவனங்களில் 17, தலைசிறந்த 100 கல்லூரிகளில் 33, தலைசிறந்த 50 மாநிலப் பல்கலைக்கழங்களில் 10 என இப்பட்டியல் அனைத்திலும் அதிக கல்வி நிறுவனங்களுடன் தமிழ்நாடு முதன்மையான இடத்தைப் பெற்றிருக்கிறது.***

***அனைவரையும் உள்ளடக்கிய அனைத்துப் பகுதிகளுக்கும் பரவிய அனைத்துப் பின்னணியில் இருந்து வரும் மாணவர்களையும் வரவேற்று வாய்ப்பளிக்கும் தமிழ்நாட்டின் உயர்கல்விச் சூழலுக்குக் கிடைத்த வெற்றி இது!***

*இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.*